*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை - 4*
*31-08-2025 SUNDAY 12 40 PM*
*ஆகாஷ்வாணி - செய்திகள்*

***<u>தலைப்புச் செய்திகள்</u>***

1) தீபாவளி உள்ளிட்ட பண்டிகை காலத்தில், உள்ளூர் உற்பத்திப் பொருட்களை வாங்கி பயன்படுத்துமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டு மக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

2) இந்தியா-சீனா நட்புறவை, பரஸ்பர நம்பிக்கை அடிப்படையில் முன்னெடுத்துச் செல்ல இந்தியா உறுதிபூண்டிருப்பதாக சீன அதிபரிடம், பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3) சுயசார்பு இந்தியாவை உருவாக்க, நாட்டு மக்கள் அனைவரும் சைக்கிள் பயணத்தை மேற்கொள்ளுமாறு மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா வலியுறுத்தியுள்ளார்.

4) இங்கிலாந்தில் சட்டவிரோதமாக குடியேறுவோர், அவரவர் நாட்டிற்கு திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று அந்நாட்டு பிரதமர் திரு. Keir Starmer தெரிவித்துள்ளார்.

5) Lagos சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Shreya Lele பட்டம் வென்றார்.

>>>>>>>><<<<<<<<

வரவிருக்கும் தீபாவளி உள்ளிட்ட பண்டிகை காலத்தில், நாட்டு மக்கள் அனைவரும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களை வாங்கி பயன்படுத்துமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

அகில இந்திய வானொலியில் மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சியில் பிரதமர் இதனை தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – பிரதமர் (1) 46 செகண்ட்ஸ்)

ஜம்மு கஷ்மீரில் மழை வெள்ள பாதிப்புகளுக்கு இடையே, கேலோ இந்தியா நீர் விளையாட்டுப் போட்டிகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டிருப்பதற்கும் பிரதமர் பாராட்டு தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (2) 41 செகண்ட்ஸ்)

*தமது Podcast உரை ஒன்றை கேட்ட, ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த கால்பந்தாட்டப் பயிற்சியாளர் Dietmar Beiersdorfer, மத்தியப்பிரதேசத்தின் ஷஹ்டோல் கிராமத்தைச் சேர்ந்த வீரர்களுக்கு, பயிற்சி அளிக்க முன்வந்திருப்பதாகவும் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார்.*

*(சவுண்ட் பைட் – பிரதமர் (3) 59 செகண்ட்ஸ்)*

*UPSC எனப்படும் மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுகளில், மிகக் குறைந்த மதிப்பெண் வித்தியாசத்தில் தேர்வுப் பட்டியலில் இடம்பெற முடியாமல் போகும் மாணவர்களுக்கு, வேலைவாய்ப்பு அளிப்பதற்கென பிரதிபா சேது என்ற டிஜிட்டல் தளம் உருவாக்கப்பட்டிருப்பதையும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.*

*(சவுண்ட் பைட் - பிரதமர் (4) 49 செகண்ட்ஸ்)*

*ரஷ்யாவின் Vladivostok நகரில் ராமாயண கண்காட்சி நடத்தப்பட்டிருப்பதன் மூலம், நம் நாட்டு கலாச்சாரம் மீது உலக நாடுகளுக்கு ஈர்ப்பு ஏற்பட்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் – பிரதமர் (5) 44 செகண்ட்ஸ்)*

*பிரதமர் ஆற்றிய உரையின் முழு தமிழாக்கம், சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு எட்டு மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படுகிறது.*

*தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.*

*>>>>>>><<<<<<<*

*இந்தியா – சீனா இடையேயான ஒத்துழைப்புகள், ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கு பயனளிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

*ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக Tianjin நகருக்கு சென்றுள்ள பிரதமர், சீன அதிபர் திரு. Xi Jin Ping-ஐ சந்தித்துப் பேசினார்.*

*இருதரப்பு நட்புறவை, பரஸ்பர நம்பிக்கை, மரியாதை மற்றும் பொறுப்புணர்வு அடிப்படையில் முன்னெடுத்துச் செல்ல இந்தியா உறுதிபூண்டிருப்பதாக சீன அதிபரிடம் பிரதமர் தெரிவித்தார்.*

இருநாட்டு பிரதிநிதிகள் அளவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில், எல்லைப்புற மேலாண்மை தொடர்பாக, ஒருமித்த கருத்து ஏற்பட்டதை தொடர்ந்து, கைலாஷ் - மானசரோவர் யாத்திரை தொடங்கியிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியா – சீனா இடையிலான ஒத்துழைப்பு இருநாடுகளையும் சேர்ந்த 280 கோடி மக்களின் நலன் சார்ந்ததாக இருக்கும் என்றும் திரு. நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

சுயசார்பு இந்தியாவை உருவாக்க, நாட்டு மக்கள் அனைவரும் சைக்கிள் பயணத்தை தவறாமல் மேற்கொள்ளுமாறு மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா வலியுறுத்தியுள்ளார்.

ஞாயிறு தோறும் சைக்கிள் பயண இயக்கம் சார்பில் புதுதில்லியில் இன்று நடைபெற்ற சைக்கிள் பயணம் குறித்து, தமது சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள அமைச்சர், காற்று மாசு, ஒலிமாசு இல்லாத சைக்கிள் பயணத்தை அனைவரும் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

>>>>>>><<<<<<<

இங்கிலாந்தில் சட்டவிரோதமாக குடியேறுவோர், அவரவர் நாட்டிற்கு திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று அந்நாட்டு பிரதமர் திரு. Keir Starmer தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், சட்டவிரோதமாக குடியேறுபவர்களை, இங்கிலாந்தில் தங்க அனுமதி அளிப்பதன் மூலம், அவர்களுக்கு வெகுமதி அளிக்க முடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

சட்டவிரோதமாக தங்களது நாட்டிற்குள் நுழையும் அனைவரும் கைது செய்யப்பட்டு திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும் திரு. Keir Starmer கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

அமெரிக்க பாதுகாப்புத் துறையின் பெயரை Department of War என பெயர்மாற்றம் செய்ய அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தலைமையிலான நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அமெரிக்காவின் ராணுவ செயல்பாடுகளை கண்காணிக்கவும். ராணுவ வீரர்களின் நலனுக்காகவும் 1789ஆம் ஆண்டு அந்நாட்டு நாடாளுமன்றத்தால் Department of War என்ற துறை உருவாக்கப்பட்டது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு இந்தப் பெயர், தேசிய ராணுவ அமைப்பு எனவும், அதன் பிறகு Department of Defence என்று மாற்றப்பட்ட நிலையில், தற்போது, மீண்டும் Department of War என பெயர் மாற்றப்படவுள்ளதாக வெள்ளை மாளிகையின் செய்தி தொடர்பாளர் Anna Kelly தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

Lagos சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Shreya Lele பட்டம் வென்றார்.

நைஜீரியாவில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில், 21-15, 21-17 என்ற செட்கணக்கில் அகர்ஷி காஷ்யப்பை வென்று பட்டத்தை கைப்பற்றினார்.

>>>>>>><<<<<<<

ஆசிய கோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது.

பீகாரின் ராஜ்கீரில் இப்போட்டி பிற்பகல் 3 மணிக்கு தொடங்குகிறது.

>>>>>>>END<<<<<<<<